# ஜாதி பேதம் மக்களின் முதல் எதிரி!

REGD. No. M. 6311 PHONE No. 55630

# நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu": A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F

தனி இதழ்: ஒரு அணா | இலங்கையில் 10 சதம்

சென்னை: ஆவணி 29உ செவ்வாய் (14—9—54)
வெளியூர்: ஆவணி 30உ புதன் (15—9—54)

மலர்: 2 இதழ்: 79

## ஆச்சாரியார் குலக் கல்வித் திட்டம்!

### கைவிடப்படவில்லையாம்!

### ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறதாம்!

பிணத்திற்கு உயிரூட்ட நிதி அமைச்சர் முனைகிறார்?

ஈரோடு, செப். 13— சென்னை கல்வி அமைச்சர் சி. சுப்பிரமணியம், ஈரோடு மகாஜன கல்லூரிக் கட்டிடம் ஒன்றின் கால்கோள் விழாவில் பேசியபோது ஆச்சாரியாரின் குலக் கல்வித் திட்டம் கைவிடப்படவில்லை என்றும், அது ஒத்திவைக்கப்பட்டிருக்கிறதென்றும் கூறினார் என்று தெரிகிறது.

சீக்கிரத்திலேயே ஒரு கமிட்டி அக்கல்வித் திட்டம் பற்றிப் பரிசீலனை செய்யுமென்றும், அதன் அறிக்கை இந்த ஆண்டு இறுதிக்குள் கிடைக்குமென்றும், தேவைப்பட்டால் ஆச்சாரியாரின் கல்வித் திட்டம் சில மாறுதல்களுடன் அடுத்த பள்ளி ஆண்டு முதல் அமுல் செய்யப்படுமென்றும் கூறினார் என்று தெரிகிறது.

நிபுணர்களின் கருத்தை எல்லோரும் ஒப்புக்கொள்ள வேண்டுமென்றும், அவர்கள் சிபார்சுக்கு எதிராக கிளர்ச்சிகள் ஆரம்பிக்கக்கூடாது என்றும் அவர் கூறினாராம்.

### சமாதானச் செலவு 50 லட்சம் ஆகும்

இந்திய சர்க்கார் நிதி அமைச்சர் தேஷ்முக் மக்கள் சபையின் அனுமதிக்காக வைத்திருக்கிற உபமான்யக் கோரிக்கைகளில், இந்தோ-சீனப் போர் நிறுத்தக் கமிஷனில் இந்தியா பங்கேற்றுக் கொண்டிருப்பதற்கு ஆகுமென்று குறிப்பிட்ட ரூ 50 லட்சத்திற்கான உபமானியக் கோரிக்கையும் ஒன்றாகும்.

## தீண்டாமையை ஒழிக்க...

— (:) —

### பம்பாய் அரசாங்கத்தின் பதினொரு திட்டங்கள்!

ரூ. 4 இலட்சம் செலவில் ஒழிப்பு வேலைகள்

தீண்டாமை ஒழிப்பு வேலைகளை பம்பாய் அரசாங்கம் தீவிரமாகச் செய்துவருகிறதாம்.

அதற்கான 11 திட்டங்களை ரூ. 4 இலட்சம் செலவில் தீட்டியுள்ளது என்றும் தெரிகிறது.

இந்த திட்டங்களுக்கான செலவுத் தொகையை இந்த நடைமுறை ஆண்டு வரவு-செலவுத் திட்டத்திலேயே ஒதுக்கி உள்ளதாம்.

தீண்டாமை ஒழிப்பு வேலையில் குறிப்பிடத் தக்க பங்கு பெறும் கிராமங்களுக்கும் பரிசளித்தல், அரிசனக் குழந்தைகளுக்கு 'பால்வாடி'கள் திறத்தல், தாங்களாகவே முன்வந்து அரிசன முன்னேற்றத்திற்கு சேவை புரியும் நிறுவனங்களுக்கு மானியம் அளித்தல், தாழ்த்தப்பட்ட குழந்

(4-ம் பக்கம் பார்க்க)

## மேற்கு ஜெர்மனியைப் போருக்குத் தயார் செய்ய...!

— (:) —

### பிரிட்டனின் புதிய திட்டம்

ஈடன்—அடினூர் பேச்சு வெற்றி

லண்டன், செப். 10— பிரஸ்ஸல்ஸ் ஒப்பந்தத்தை மேற்கு ஜெர்மனி, இத்தாலிக்கும் விஸ்தரிக்கும்படி பிரிட்டிஷ் அயல்நாட்டு அமைச்சர் ஈடன் கேட்பார் என்று தெரிகிறது.

அட்லாண்டிக் ஒப்பந்தத்தில் மேற்கு ஜெர்மனியைச் சேர்த்துக் கொள்வதற்கும் பூர்வாங்க நடவடிக்கை அது என்று கருதப்படுகிறது.

மீண்டும் ஜெர்மன் ஆக்கிரமிப்பு ஏற்படுமானால், அதைத் தடுப்பது பிரஸ்ஸல்ஸ் திட்டத்தின் ஒரு முக்கிய அம்சமாகும்.

மேற்கு ஐரோப்பிய கூட்டுப் பாதுகாப்புத் திட்டத்தில் சேர மேற்கு ஜெர்மனியை இணங்க வைப்பதற்கு அந்த ஷரத்தைக் கைவிட வேண்டியிருக்குமெனக் கருதப்படுகிறது.

★

### பின்னர் வந்த செய்திகள்

ஐரோப்பிய பாதுகாப்பு ஒப்பந்தம் பற்றி மேற்கு ஜெர்மனியின் தலைவர் அடினூருக்கும், பிரிட்டிஷ் வெளிநாட்டிலாகா அமைச்சர் ஈடனுக்கும் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் நல்ல முடிவு ஏற்பட்டுவிட்டதாக அறிவிக்கப்படுகிறது.

பிராங்கோ-ஜெர்மன் ஒத்துழைப்புடன் ஜெர்மனியின் சுதந்திரத்தைப் பாதுகாக்கவும், உலக சமாதானத்தைப் பாதுகாக்கவும் ஜெர்மனியின் உயர்வு அவசியம் என்பதை இருவரும் உணர்ந்திருக்கிறார்கள் என்று கூறப்படுகிறது.

## கோஷங்களால் ஜாதிகள் அழியாது!

### சமுதாய அநீதி அரசியல் வளர்ச்சியை தடை செய்யும்

### நீதிபதி கஜேந்திரகாட்கர் கண்டனம்

### ஜாதிக் கழகங்களும் இறுதியில் ஜாதியை வலுவடையச் செய்கின்றன

சமுதாயத்தில் குறுகிய மனப்போக்கை வளர்க்கிறது

### சாதாரண மனிதனுக்கு உண்மையைக் கூறுங்கள்

"ஜாதி முறைகள் நாட்டிலே விளைவிக்கும் மிகவும் குறிப்பிடத் தக்க இழிவு என்னவென்றால், நாட்டு மக்களிடையே உயர்ந்தவன்—தாழ்ந்தவன் என்ற மனப்பான்மையை உண்டுபண்ணுகின்றன; சமுதாய சமத்துவம் நாட்டிலே இல்லாதபோது கிடைக்கும் அரசியல் சுதந்திரம், வளர்ச்சி அடைவது என்பது இயலாததாகும்,"

—என்று நீதிபதி பி. பி. கஜேந்திரகாட்கர் பம்பாயில் ஆந்திரிய [illegible] பேசுகையில் கூறினார். ஜாதி முறைகள் நமது நாட்டில் விளைவித்த கொடுமைகளைக் குறிப்பிட்டு, அவர் மேலும் சொன்னதாவது:—

"அரசியல் சுதந்திரத்திலும், ஜனநாயகத்திலும் நம்பிக்கை கொண்ட நாம் அனைவரும், உண்மையான முறையில், வாழ்க்கையிலும், சமுதாயப் பணிமனைகளிலும் சமத்துவம் நிலவுமாறு நம்மால் இயன்றதைச் செய்யவேண்டும்;

"இந்நாட்களிடையே ஜாதி முறைகள் குறுகிய மனப்பான்மையை உண்டுபண்ணுகின்றன. தங்களுடைய ஜாதியார், தங்களுடைய வகுப்பார் என்போரின் நலனுக்கு மட்டுமே உழைக்கவும், அவர்களது முன்னேற்றத்திற்கு மட்டுமே உதவும் மனப்பான்மையே ஜாதி உணர்ச்சியை வளர்க்கிறது;

"சிறுபான்மை ஜாதியினர், பிற்பட்ட வகுப்பினர் எனப்படுவோரின் நலன்களைப் பாதுகாக்க அமைக்கப்படும் ஜாதிக் கழகங்களும், கட்சிகளும் ஏற்படுகின்றன; இவைகள் ஒரு குறிப்பிட்ட அளவு சமூக சேவை செய்கின்றன என்பது ஒருபுறமிருந்தாலும், இதுபோன்ற ஜாதிக் கழகங்கள் எல்லாம், ஜாதி உணர்ச்சியை வளர்ப்பதாகவும், ஜாதி முறைகளை வலுப்படுத்தவுமே பயன்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது;

"ஜாதிகளையோ, அல்லது ஜாதி உணர்ச்சியையோ, வெறும் கோஷங்களினால் அழித்துவிட முடியாது. அடிக்கடி கோஷமிட்டால் மட்டும் பயன் இல்லை. முதலில் ஒரே ஜாதிக்குள் காணப்படும் பலதரப்பட்ட பிரிவுகளை நீக்க

(4-ம் பக்கம் பார்க்க)

## அமெரிக்க நலன்கள் எல்லா இடங்களிலும் பாதுகாக்கப்படுமாம்!

### ஜனாதிபதி ஐசன்ஹோவர் அறிவிப்பு

'மாஞ்செஸ்டர் கார்டியன்' இதழ் கண்டனம்

டென்வர், செப். 13— அமெரிக்க ஜனாதிபதி ஐசன்ஹோவர், அமெரிக்காவின் உயர்தர பாதுகாப்பு ஸ்தாபனமான தேசீயப் பாதுகாப்பு ஸ்தாபனம், அமெரிக்காவின் முக்கியப் பகுதிகளைப் பாதுகாப்பதில் இப்போது கடைப்பிடிக்கும் கொள்கையை மீண்டும் உறுதிப்படுத்தி, அமெரிக்காவின் நலனை எவ்வகையிலும் எந்த இடத்திலும் பாதுகாக்க முடிவு செய்திருக்கிறது என்று கூறினார்.

இந்த ரகசியக் கமிட்டியின் கூட்டத்தில் எவ்வித திட்டவட்டமான முடிவும் எடுக்கப்படவில்லை என்றும் கூறினார்.

★

நேற்று பேசிய இராஜாங்க அமைச்சர் டல்லஸ், குவேமாய் தீவு பற்றி தேசீயப் பாதுகாப்பு ஸ்தாபனம் தக்க நடவடிக்கை எடுக்கும் என்று கூறினார்.

குவேமாயின் பாதுகாப்பு, பார்மோசாவின் பாதுகாப்புடன் இணைந்தது என்று டல்லஸ் கூறியிருந்தார்.

டல்லஸ் பார்மோசா சென்றிருந்தபோது சியாங்-கே-ஷேக்கிற்கு எதிரான முடிவு ஒன்று ஏற்பட காரணமாயிருந்தார் என்று தெரிகிறது.

குவேமாயின் பாதுகாப்பைப் பற்றியே இந்த முடிவு எடுக்கப்பட்டதாம்.

சியாங்கின் அமெரிக்க ஆலோசகர்கள், குவேமாய் பார்மோசாவின் பாதுகாப்புடன் இணைக்கப்பட வேண்டுமென்று கூறுவதை ஏற்றுக் கொள்ளவில்லை என்று செய்திகள் கூறுகின்றன.

இப்பிரச்சினையைப்பற்றி பிரிட்டிஷ் இதழான 'மாஞ்செஸ்டர் கார்டியன்' எழுதுகையில், 'குவேமாய் நிலைப் பாதுகாக்க அமெரிக்கா தனது ஏழாவது கடற்படையை அனுப்பினால், அது, அமெரிக்காவின் குற்றமாகவே கருதப்படும்; இதுமாதிரி செய்வது அமெரிக்காவின் அதிகாரத்தையே காட்டும்" என்று குறிப்பிடுகிறது.

# நெல்லை மாநாடுகள் - செப். 18, 19-ல்

# நம் நாடு

தி.மு.க.தின இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 14—9—54 செவ்வாய்


# ஆராய்ந்து செய்வீர்!

தங்கையோ : தவித்த நிலையில் படுத்திருக்கிறாள்; குழந்தைகளோ பசி, பசி என்று அலறுகின்றன; மழை பொழிகிறது; வீடு, தாரை தாரையாக ஒழுகுகிறது!

வேலை தேடிச் சென்றவன் வெறுங் கையோடு திரும்புகிறான்! உடலில் இருக்கும் பசியின் சோர்வைவிட, உள்ளத்தில் ஏற்பட்ட ஏமாற்றம் அவனை வாட்டியது! வெறுங் கையோடு வீடு திரும்பி, அங்கு வெதும்பிய நிலையில் பிரசவ வேதனைப் படும் தங்கைக்கு என்ன செய்வது என்று புரியாமல் தவித்தது, அவன் மனம்! கண்ணீர் சொட்ட உள்ளே நுழைகிறான்; அந்தப் பாழும் குடிசையில் அவன் கண்ட காட்சி அவனைத் திகைக்க வைத்தது; 'உயிருக்குப் போராடும் என் தங்கையையும், குழந்தைகளையும் காப்பாற்ற எனக்கு சக்தி இல்லையா?' என்று கேட்டுக் கொண்டான்!

சில நிமிடங்களில் அவன் மனம் கல்லாயிற்று; உள்ளம் உயிரை இழந்தது; ஓடினான், பணம் படைத்தவனின் இல்லம் நோக்கி!

அன்று அவனுக்குக் கிடைத்தவைகள் இரண்டு ரொட்டித் துண்டுகளும், கொஞ்சம் வெண்ணெயும் தான்!

ஆனால், பாவம்! இந்தத் தவறுசெய்யும்போதே அவன் பிடிபட்டான்! கோர்ட்டிலே அவனுக்கு எதிராக ரொட்டித் துண்டுகள் சாட்சியம் கூறின; சிறைக்கு அவனைத் துரத்தின; அவன் குடும்பமே கேட்பாரற்று, நசித்தது!

இந்த சோக சித்திரத்தைத் தீட்டிய விக்டர் ஹியூகோ, மனித சமுதாயத்தில் நன்கு கவனிக்கப்பட வேண்டிய பிரச்சினை ஒன்றின் விளக்கமான படப் பிடிப்பைத் தந்துவிட்டுப் போயிருக்கிறான்!

படிக்கப் படிக்கத் தெவிட்டாத ஹியூகோவின் இந்தச் சித்திரம், மக்களுக்காக உழைக்கப் புறப்பட்ட அனைவருக்கும் ஒரு கலங்கரை விளக்கம்!

திருடன் ஏன் உற்பத்தியாகிறான்?

பிறக்கும்போது ஒரே நிலையில் தோன்றும் மனித குலத்தில், திருடன் ஏன் உற்பத்தியாகிறான்? சூதாடி தோன்றுவது எப்படி? கொலைகள் நடக்கக் காரணம் என்ன? குற்றங்கள் அதிகரிப்பதேன்? 'மனித குலம் ஒன்றுபட்ட சமுதாயமாக நலம் பெற்று வாழ, தனிப்பட்ட மனிதனுக்குள்ள பொறாமை, சுயநலம் முதலிய துர்க்குணங்கள் ஒழிய வேண்டும்; அவனுக்குள்ள காட்டுமிராண்டிக் காலத்து எண்ணங்கள் ஒழிய வேண்டும்; இப்படிப்பட்ட நல்லதொரு மனமாற்றம் அடைந்த திருந்திய சமுதாயம் ஏற்பட கல்வியறிவு வளர வேண்டும்; அறியாமை நீங்கி, அன்பு நெறி பரவிய சமுதாயத்தில் கொலை, கொள்ளை ஏற்பட நியாயமில்லை; திருடர்கள் தோன்றவே வழியில்லை!"

இப்படியெல்லாம் கூறுவர், மனிதனைத் திருத்த, மனோதத்துவ சாஸ்திரம் பேசுவோர்!

அவர்கள் கூறுவதும் சரிதான்; ஆனால், நாட்டிலே இருக்கும் பயங்கர நிலை, மனோதத்துவம் பேசுவதைவிட, 'தீவிரமான வேலைகள்' தேவை என்பதைத்தான் காட்டுகின்றன!

குடித்துப் பழகி, இன்று அதைக் கைவிட முடியாமல் சிறைக்கூடம் ஏகுபவர்கள் ஒருபுறமிருக்க, சிறையிலிருக்கும் கைதிகளில் பெரும்பாலோர், திருட்டுக் குற்றமும் அதன் காரணமாகக் கொலைக்குற்றமும் சுமத்தப் பட்டவர்கள்தான்!

இன்று சென்னை மாகாணத்திலிருக்கும் 14,000 கைதிகளில் பத்தாயிரம் பேர் பிறர் சொத்தை நாடியதால் சிறைக்கனுப்பப்பட்டவர்கள்!

இந்தப் பத்தாயிரம் கைதிகளுக்கும் நற்போதனை செய்து சிறையிலிருந்து மீண்ட பின், அவர்கள் ஸ்திரமும், நியாயமுமான தொழிலில் அமர ஆவன செய்ய வேண்டுமென்று நேற்று முன்தினம் தேனாம்பேட்டையில் கூடிய விடுதலை செய்யப்பட்ட கைதிகள் நலன் சங்க ஆண்டுவிழாவில் கலந்து கொண்ட அன்பர்கள் பலர் பேசியிருக்கின்றனர்.

நம்மை ஆள வந்த பிரகாசாவும், அவருக்கு உதவி செய்யும் அரசாங்கம் பிரதம காரியதரிசி ராமுண்ணி மேனனும் பேசியபின், தவறு செய்தவர்களைத் தண்டிக்கும் அதிகாரம் பெற்ற நீதிபதி கோவிந்த மேனனும் சொற்பொழிவாற்றியிருக்கிறார்.

விடுதலையான கைதிகளுக்கு உதவி புரிய வேண்டியது தான் என்று எல்லோரையும் போல வழக்கமான பாட்டைப் பாடிவிட்டுச் செல்லாமல், மிகவும் பொருத்தமான பிரச்சினை ஒன்றை ஆராயச் சொல்லியிருக்கிறார், நீதிபதி மேனன் :

"விடுதலையான கைதிகளுக்கு உதவி புரியும்போது, அவர்கள் ஏன் சிறை செல்ல நேரிட்டதென்பதற்கான காரணங்களை சுலபம் கண்டறிய முயற்சித்து அவர்களைப் பூரணமாக சீர்படுத்த வழியிருக்கிறதா என்று ஆராய வேண்டும்!"

என்று கூறி இருக்கிறார், மேனன்!

உடலுக்கு ஊறு நேர்ந்த தன் காரணம் தெரிந்தால்தானே மறுபடியும் அந்த ஊறுவராமல் தடுக்கமுடியும்?

அதுபோல, கைதிகள் தோன்றும் காரணம் என்ன என்பதை ஆராய்ந்தறிந்தால்தானே, மேலும் கைதிகள் ஏற்படுவதைத் தடுக்க முடியும்? மிகவும் அவசியமான வேலை! அழகாக எடுத்துக் கூறியிருக்கிறார் மேனன்!

இதனையேதான், ஹியூகோவும் படம் பிடித்துக் காண்பித்திருக்கிறான்!

மேனன் கேட்டது கேள்வி; ஹியூகோ சொல்லியிருப்பது பதில்!

'மனிதன் ஏன் திருடனாகிறான்,' என்று ஆராயச் சொல்கிறார், நீதிபதி!

'மனிதன் என்னதான் அறிவு வளர்ச்சிபெற்றிருந்தாலும், சந்தர்ப்பமும், சூழ்நிலையும் அவனை மாற்றுகிறது; வறுமையில் வாடியவன் திருடுவதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்,' என்கிறான், ஹியூகோ!

ஹியூகோ மாத்திரமென்ன, மனித வரலாற்றின் ஒவ்வோர் கோத்திலும் தோன்றிய அறிஞர்கள் அத்தனை பேரும் ஏகோபித்து ஒத்துக்கொண்ட விஷயம் இது!

கர்மவினை பேசும் கபடர்கள் தவிர, வேறு எல்லோரும் சுலபத்தில் புரிந்து கொள்ளக்கூடியது!

வறுமை, திருட்டை உண்டாக்குகிறது!

சுயநலம், பணம் படைத்தோனுக்கு இன்னும் பணம் சுருட்டும் எண்ணத்தை அளிக்கிறது!

இந்த இரண்டு சூழ்நிலைகளுக்கும் காரணம், நாட்டிலே காப்பாற்றப்பட்டுவரும் சமுதாய அமைப்புதான் என்பதைச் சிறிது ஆராயும் திறமை படைத்தவர்களும் உணரலாம்!

அன்று, திரு. கோவிந்த மேனன் அவர்களின் பேச்சை கேட்டவர்கள், இந்த நாட்டின் சிறைக்கூடங்களை நிரப்பும் திருடர்கள் ஒழிய, 'இந்த நாட்டு சமுதாய அமைப்பு மாற வேண்டும்,' என்பதை நன்கு ஆராய்ந்தால், உணரக் கூடும்!

வறுமை ஒரு பக்கம் வளரவும், வாழ்வு பெற்றவன் செல்வம் சேர்த்துக் கொண்டே இருக்கும் முதலாளித்துவ சமுதாய அமைப்பு ஒரு பக்கமும் இருக்கும்வரை, இந்த நாட்டில் திருடர்கள் குறைய மாட்டார்கள்; மாறாக, எண்ணிக்கை வளர்ந்து கொண்டே தான் இருக்கும்!

திருடியவன் கொழுத்தால் 'ஆண்டவனருள்' என்றும், ஏமாந்தவன் மாட்டிக் கொண்டால் 'அவன் தலைவிதி' என்றும் தத்துவம் பேசும் இந்து மதக் கோட்பாடும், அதைக் கட்டிக் காக்கும் கபட வேடதாரிகளும், இந்த நாட்டிலே திருடர்கள் எண்ணிக்கை அதிகமாக உதவுகின்றனர்!

முதலாளிகள் இருப்பதும், ஜடாமுடிகள் உலாவுவதும் தான், நாட்டில், திருடர்கள் தோன்றக் காரணம்!

இதையெல்லாம் யோசித்துத்தான், நீதிபதியும், கைதிகள் தோன்றும் அடிப்படையை ஆராயச் சொல்லியிருக்கிறார்!

உற்பத்தி ஸ்தானத்தைக் கண்டவர்கள் அதை ஒழிக்காமலிருப்பது, மகா தவறு செய்தவர்களாவார்கள்!

வறுமையும் அறியாமையும் ஒழிக்கப்பட்ட சமுதாயத்திலே கொலை, களவு, காமம் முதலிய எந்தத் தவறுகளுக்கும் இடமில்லை!

இந்தப் பெரும் பணியில் ஈடுபடவேண்டுவது, நாட்டுக்கு உழைக்கப் புறப்பட்டவர்களின் முதல் சேவை! ஹியூகோவின் வழி வந்தவர்களின் கடமை!!

## தாயகம் திரும்புவோருக்கு நஷ்ட ஈடு

### தமிழர் வர்த்தக சபை முயற்சி

கொழும்பு, செப். 11—

இந்தியரை வெளியேற்றும் இலங்கை சர்க்கார் திட்டப்படி இலங்கையிலிருந்து வெளியேறும் இந்திய ஊழியர்களுக்கு ஒரு மாதச் சம்பளம் நஷ்ட ஈடாகத் தரும்படி சபையின் பொதுக் குழுவிற்கு சிபார்சு செய்வதென இந்திய வர்த்தக சபையின் நிர்வாகக் குழு தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளதாம்.

ஒவ்வொரு வருட சேவைக்கும் ஒரு மாத சம்பளம் தருமாறு சிபார்சு செய்யப்பட்டுள்ளதாம்.

நவம்பர் இறுதிக்குள் வெளியேற்றப்பட இருக்கும் 5000 பேர்களில் பலர் வர்த்தகக் காரியாலயங்களில் வேலை பார்ப்பவர்கள் என்றும், அவர்கள் தாயகம் சென்று வசதியாக குடியமரும் பொருட்டு சபையின் அங்கத்தினர்களாக இருக்கும் கம்பெனிகள் தங்கள் ஊழியர்களுக்கு நஷ்டஈட்டைத் தரவேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

வர்த்தக சபையின் பொதுக் குழு விரைவிலேயே கூட்டப்பட்டு, நிர்வாகக் குழுவின் சிபாரிசு அதன் அங்கீகாரத்திற்கு வைக்கப்படும் என்று தெரிகிறது.

## வியட்நாம் பிரதமர் — இராணுவத் தலைவரிடையே கருத்து வேற்றுமை

### பதவியை விட்டு வெளியேற மறுப்பு

வியட்நாம் பிரதம மந்திரி நகு-டென்-டியமுக்கும், இராணுவ அலுவலக அதிகாரிகளுக்கும் இடையே முரண்பாடுகள் தோன்றியுள்ளனவாம்.

இராணுவத் தலைவர், ஜெனரல் வான் ஹின் என்பவரை 6 மாத விடுமுறை எடுத்துக் கொண்டு பிரான்சுக்குச் செல்லும்படி பிரதமர் உத்தரவிட்டு, அவரது இடத்தில் தற்காலிகமாய் அமரும்படி ஜெனரல் வான்-வீ என்பவரை நியமித்ததாயும் சொல்லப்படுகிறது.

பிரதமரின் கட்டளையை ஜெனரல் வான்-வீ ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டதால் அவர் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளாராம்.

நாட்டுக்கு விரோதிகளின் அபாயம் அதிகரித்திருக்கும் நேரத்தில் பிரான்சுக்குப் போக தான் தயாராக இல்லை என்று ஜெனரல் வான் ஹின்னும் மறுப்பு தெரிவித்துள்ளாராம்.

ஜெனரல் ஹின் தனது இராணுவ பந்தோபஸ்துடனும், பிரதமர் தனது அலுவலகத்திலிருப்பு இடத்தில் போலீஸ் பந்தோபஸ்துடனும் இருந்தனராம்.

இராணுவத் தலைவர் பிரதமருக்கெதிராக திடீர் புரட்சி செய்யப்போவதாக வெளியான வதந்தியினாலேயே பிரதமர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டாராம்.

## சிறையில் குஞ்சன் நாடார் தாக்கப்பட்டார்

### திருமதி குஞ்சன் நாடார் கூறுகிறார்

நாகர்கோவில், செப். 11—

சிறை வைக்கப்பட்டிருக்கும் திரு-தமிழர் தலைவர் குஞ்சன் நாடார் சிறைக்குள் போலீசாரால் தாக்கப்பட்டதாயும், இதற்காக அவர் இரு நாள் சிறைக்குள் உண்ணாவிரதமிருந்ததாயும், பின் அதிகாரிகள் தந்த உறுதியின் பேரில் உண்ணாவிரதத்தைக் கைவிட்டதாயும், அவரைச் சிறையில் சென்று பார்த்த அவரது மனைவியிடம் திரு. குஞ்சன் நாடார் கூறியதாக, அவர் மனைவி திருமதி குஞ்சன் நாடார் நிருபர் ஒருவருக்களித்த பேட்டியின்போது குறிப்பிட்டதாகத் தெரிகிறது

## கொத்தலாவலை வருகை

### யாழ்ப்பாணத் தமிழர்கள் பகிஷ்கரிப்பர்

கொழும்பு, செப். 12—

இலங்கைப் பிரதமர் கொத்தலாவலை இலங்கையின் வடக்குத் தமிழ்ப் பகுதிகளுக்கு இம்மாதம் வருகை தரும்போது அந்த வருகையில் கலந்து கொள்ளாது பகிஷ்கரிப்பது என்று இலங்கை தமிழர் காங்கிரஸ் தீர்மானித்துள்ளதாகத் தெரிகிறது.

பகிஷ்கரிப்புத் தீர்மானம் நேற்றிரவு யாழ்ப்பாணத்தில் நடந்த தமிழர் காங்கிரஸ் நிர்வாகக் குழுவில் ஏகமனதாக நிறைவேறியுள்ளதாம். தமிழர் தம் மற்றுமொரு அரசியல் கட்சியான 'பெடரலிஸ்ட்' கட்சியும், இலங்கைப் பிரதமரின் வருகையைப் பகிஷ்கரிக்க முடிவு செய்துள்ளதாகவும் தெரிய வருகிறது.

## கோசி அணைக்கட்டுக்கு சென்னை எஞ்ஜினியர்

சென்னையைச் சேர்ந்த ஏகாம்பரம் என்ற இஞ்சினியர் பீஹாரில் உள்ள கோசி அணைத் திட்டத்தின் இஞ்சினியராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

## தெரிந்து கொள்ளுங்கள்

1. 1947 ஆகஸ்ட் மாதத்துக்குப் பிறகு, இடம் பெயர்ந்தவர்களுக்காக சர்க்கார் எவ்வளவு செலவழித்து வருகின்றனர்?

(அ) நாளொன்றுக்கு ஒரு லட்ச ரூபாய்; (ஆ) மூன்று லட்ச ரூபாய் (இ) எட்டு லட்ச ரூபாய்

2 ஐந்து ஆண்டுத் திட்ட காலத்தில் முதல் மூன்று ஆண்டுகளில் இந்தியாவில் மின்சார நிலையங்கள் உற்பத்திச் சக்தி எவ்வளவு அதிகரித்துள்ளது?

(அ) 10 சதவிகிதம்; (ஆ) 25 சதவிகிதம்; (இ) 85 சதவிகிதம்.

3 மத்திய சுகாதார மந்திரி சமீபத்தில் திறந்து வைத்த அகில இந்திய மலேரியா ஸ்தாபனம் எங்கு உள்ளது?

(அ) டில்லியில்; (ஆ) பூனாவில்; (இ) பங்களூரில்.

4 சித்தரஞ்சன ரயில் எஞ்சின் உற்பத்திச் சாலையின் உற்பத்தி சக்தி என்ன?

(அ) வாரத்துக்கு இரண்டு ரயில் எஞ்சின்கள்; (ஆ) இரண்டு வாரத்துக்கு இரண்டு ரயில் எஞ்சின்கள்; (இ) மாதத்துக்கு இரண்டு ரயில் எஞ்சின்கள்.

5. இந்திய விமானப் போக்குவரத்துக் கார்ப்பொரேஷன் எப்பொழுது ஆரம்பிக்கப்பட்டது?

(அ) 1952 ஜனவரி 7-ந் தேதி; (ஆ) 1953 ஜூலை 15-ந் தேதி; (இ) ஆகஸ்ட் 1-ந் தேதி.

விடைகள் :— 1-(இ); 2-(இ); 3-(இ); 4-(அ); 5-(ஆ)

# கழகக் கூட்டங்கள்

★

மாமடக்கி

தி. மு. கழக துவக்கவிழா

அண்ணா திடலில்

(போஸ்டாபீஸ் பக்கம்)

16—9—54 மாலை 6 மணிக்கு

தலைவர் : பெ. மு. பெரியய்யா

பேசுவோர் :

என். வி. நடராசன்

முக. மீரா

இராம. அசோகன்

★

கோவை

சாமி (எடிசன்ஸ்) தியேட்டரில்

செல்வபுரம் தி. மு. கழக

3-வது ஆண்டு விழா

16—9—54 காலை 10 மணிக்கு

பேசுவோர் :

எஸ். முத்து

ப. கண்ணன்

கோபிராசு

சம்பத்

* * *

அன்று மாலை செல்வபுரம் அழகிரி திடலில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெறும்.

## திருமணங்கள்

15—9—54 காலை 8 மணிக்கு தாத்தையங்கார்பேட்டை மணமகள் இல்லத்தில், தோழர் சுப்பிரமணியம்—தோழியர் சரோசா திருமணம், தோழர் எம். பி. முத்தருப்பன் தலைமையில் நடைபெறும். தோழர் சி. பி. சிற்றரசு சொற்பொழி வாற்றுவார்.

• • •

ராசமாணிக்கம்—சம்பூர்ணம்

16—9—54 காலை 9 மணிக்கு கோவை வைசியாள் வீதி கேசிமுத்து ரங்கசாமிக் கவுண்டர் அறநிலையத்தில் தோழர் என். ஏ. ராசமாணிக்கம்—தோழியர் சம்பூரணம் திருமணம் தோழர் ஈ. வெ. கி. சம்பத் தலைமையில் நடைபெறும். தோழர்கள் என். அப்பாவு, சுந்தரராசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

## சொற்பயிற்சிக் கூட்டம்

சென்னை, 5-வது வட்டம் தி. மு. கழகச் சார்பில் 15-9-54 புதன் மாலை 6-30 மணிக்கு தோழர் கௌரி தலைமையில், "ஒழுக்கமும், உயர்வும்" என்பது பற்றி தோழர்கள் ஏ. நடேசன், ஆர். வேணுகோபால், ஆவேணு, கே. கன்னியப்பன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்

## தோழர் ராம. சின்னையா வருகை

சென்னை, செப் 14—மலாய் நாட்டிலுள்ள சிரம்பானுக்குச் சென்றிருந்த தோழர் ராம. சின்னையா அவர்கள் சிங்கப்பூரிலிருந்து வந்த 'ரஜுலா' கப்பலில் இன்று சென்னைக்கு வந்து சேர்ந்தார்கள். தோழர்கள்: மாணிக்கம் செட்டியார், ராமசுப்பையா, லெ. விசுவநாதம் செட்டியார், என். வி. மதிவாணன், அ பொன்னம்பலனார் ஆகியோர் வரவேற்றார்கள். பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்களைக் கண்டு பேசிய பிறகு 2, 3 நாட்களில் புதுக்கோட்டைக்குச் செல்வார்கள்.

## ரூ. 215 கோடி உபமான்யம்

இந்திய மக்கள் சபையில் 1954—55-ம் ஆண்டுக்கான மத்திய சர்க்காரின் செலவுகளுக்கு ரயில்வேக்கள் உட்பட ரூ 215,60,68,000 க்கு உபமானியக் கோரிக்கையை நிதி அமைச்சர் தேஷ்முக் கேட்டிருக்கிறார்.

# வியட்நாமில் கொந்தளிப்பு

## இராணுவப்புரட்சி ஏற்படுமென அச்சம்

செய்கோன், செப். 13—வியட்நாமில் இராணுவப் புரட்சி ஏற்படக்கூடும் என்ற அச்சம் வலுவடைந்து வருகிறதாகக் கூறப்படுகிறது.

இராணுவ காரியாலயத் தலைமை அதிகாரி ஜெனரல் நகு-யன்-வான் ஹின் என்பவரைப் பதவியிலிருந்து நீக்க பிரதம மந்திரி செய்த முடிவை ஆட்சேபித்து நாடு முழுமையும், இராணுவ கோஷ்டிகள் கூட்டங்கள் நடத்தின என்று தெரிகிறது.

பாதுகாப்பு அமைச்சர் லீ-கு-சான், இராணுவகாரியாலயத்திற்குச் செல்ல முடியவில்லையாம்; அவருக்கு அனுமதி மறுக்கப்பட்டது.

ஜெனரல் ஹின் சரணாகதி படையுமாறு கேட்க அவர் வந்தார் என்று தெரிகிறது. சர்க்காரின் கட்டளைக்குத் தாம் கீழ்ப்படியப் போவதில்லை என்று ஜெனரல் ஹின் உறுதியுடன் இருக்கிறார், சர்க்காரின் அக்கிரமத்தை எதிர்த்து, இராணுவ அதிகாரிகள், கோடி நடவடிக்கையில் இறங்கிவிடாமல் தடுக்க தன்னாலானதை யெல்லாம் அவர் செய்து வருவதாக இராணுவ வட்டாரங்கள் கூறின.

செய்கோன் நகரில் கொந்தளிப்பு ஏற்படலாமென்பதால் முக்கியமான இடங்களில் அதிகப்படியாகக் காவல் போடப்பட்டிருக்கிறது, செய்திகள் கடுமையாகத் தணிக்கை செய்யப்படுகின்றன!

ஜெனரல் வான்-ஹின் என்ற அவ்வதிகாரியை பதவியிலிருந்து நீக்க பிரதமர் பலாத்கார முறைகளில் ஈடுபடுகிறார் என்றால் அதை இராணுவம் பலமாக எதிர்க்கும் என்று நம்பப்படுகிறது.

ஆறு மாதம் விடுமுறையில் செல்லுமாறு பிரதமர் நிகோ-டின்-டியன் பிறப்பித்த உத்தரவுக்குப் பணிய ஜெனரல் வா ஹின் சென்ற சனிக்கிழமை பன்று மறுத்துவிட்டார்.

இவர் வியட்நாமின் முன்னாள் பிரதமரின் மகன் என்பதும் இப்போது பதவியில் உள்ள பிரதமரை நீக்கிவிட்டு, தனது தந்தையைப் பதவியில் அமர்த்த ஜெனரல் ஹின் முயற்சிப்பதாகவும் பிரதமர் நிகோ-டின்-டியன் கூறுகிறார்.

# ஜாதி பேதம் மக்களின் முதல் எதிரி

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

வேண்டும்—அதன் பின், ஒரே ஜாதி என்ற உணர்ச்சி ஏற்பட்ட பின்னர், ஜாதி முறைகளின் நோக்கம் என்னவென்பது பற்றி எடுத்துச் சொல்ல வேண்டும்.

"இன்றைய நிலையில் ஜாதி முறைகளும், ஜாதி உணர்ச்சியும் நம் அனைவராலும், 'பொது மக்களின் முதல் எதிரி,' அவை என்று உணரப்பட வேண்டும்;

"ஜாதி முறையை நீடிக்கும் அமைப்புகளை எதிர்த்துப் பிரச்சாரம் செய்து, சாதாரண மனிதனின் தரத்தை உயர்த்தி, அவனது கல்வி அறிவை வளர்த்தோம் என்றால் ஜாதி முறைகள் ஒழியும் என்று நான் நம்புகிறேன்."

## பாங்கி ஊழியர் பிரச்சினை

### கூடிப்பேச முயற்சி

புதுடில்லி, செப். 13—பாங்கி தீர்ப்பும் பற்றிய பிரச்சினையில் ஒரு நல்ல முடிவு காணுவதற்கு விவாதம் நடத்த பாங்கி சிப்பந்திகளின் பல்வேறு சங்கங்களின் பிரதிநிதிகள், தொழில் அமைச்சர் கந்துபாய் தேசாயைச் சந்திப்பதற்கு அழைக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

அதன் பின்னர், பாங்கி நிர்வாகிகளின் பிரதிநிதிகள் பூர்வாங்க விவாதத்திற்காக மந்திரியை சந்திப்பார்கள் என்று தெரிகிறது.

### ஜகன் விடுதலை

பிரிட்டிஷ் கயானாவின் மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ஜெகன் விடுதலை செய்யப்பட்டார் என்று தெரிகிறது. ஆறு மாதம் கண்டிக்கப்பட்ட சிலர் சிறையில் நல்லமுறையில் நடந்துகொண்டமைக்காக ஒரு மாதம் முன்னரே விடுவிக்கப்பட்டார் என்று தெரிகிறது.

விடுதலை செய்யப்பட்டாலும் இவர் ஜார்ஜ் டவுன் எல்லையை விட்டு வெளியே செல்ல முடியாது என்று உத்தரவுகள் அமுலில் உள்ளன.

## தீண்டாமையை ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தைகளை வளர்த்து முன்னேற்றமடையச் செய்யும் குடும்பங்களை உற்சாகப்படுத்தும் பொருட்டு, அவர்களுக்கு மானியம் வழங்குதல் போன்றவை எல்லாம், பம்பாய் அரசாங்கத்தின் அந்த 11 திட்டங்களில் இடம் பெற்றுள்ளதாகத் தெரிகிறது.

தாழ்த்தப்பட்ட குழந்தைகளையும், சாதி இந்துக் குழந்தைகளையும் ஒன்றாகச் சேர்த்து அவர்களுக்கு ஒன்றாக உணவு வழங்குவதின் மூலம் அரிசனங்கள்மீது சாதி இந்துக்கள் கொண்டுள்ள இழிவு மனப்பான்மை மாறவசதி ஏற்படும் என்று பம்பாய் அரசாங்கம் கருதுவதால் அத்தகைய ஒரு 'கூட்டு விருந்து' நடத்த தனிப்பட்ட நிறுவனங்களுக்கு ரூ 200க்கு அதிகமான அளவு மானியம் தரப்படுமாம்.

ஒரு அரிசனக் குழந்தையை தன் குழந்தையுடன் ஒன்றாக இணைத்து வளர்த்து முன்னுக்குக் கொண்டு வருகிற ஒவ்வொரு குடும்பத்திற்கும், ஒரு அரிசனக் குழந்தைக்கு மாதம் ஒன்றுக்கு ரூ 25 வீதம் மானியம் தரப்படுமாம்.

இதனால், அரிசனக் குழந்தைகள் வளர்ந்து பெரியவர்களாகும்போது அவர்கள் மீது மற்றவர்கள் கொள்ளும் தாழ்வு மனப்பான்மை மாறுதலாயிருக்கும் என்றும் பம்பாய் சர்க்கார் எதிர்பார்ப்பதாகத் தெரிகிறது.

## மதுவிலக்கு!

### பல இராஜ்யங்கள் ஆதரிக்கின்றனவாம்!

புதுடில்லி, செப். 13—திட்டக் கமிஷன் விசாரணை நடத்திய பதினாறு இராஜ்யங்களில், பெரும்பான்மையானவை மதுவிலக்கை ஆதரித்திருக்கின்றனவாம்.

ஜம்மு, காஷ்மீர், ஹைதராபாத் போன்றவை தங்களிடம் மதுவிலக்கை அமுல் செய்யத் திட்டமேதும் கிடையாது என்று தெரிவித்திருக்கின்றன.

பூரண மதுவிலக்கு அமுலில் இருக்கும் சென்னையும், சௌராஷ்டிராவும் மதுவிலக்கை நீடித்து நடத்த விரும்புகின்றன.

ஆந்திரா பூராவும் மதுவிலக்கு அமுலில் இருக்கிறது என்றும், இப்போது, இராம மூர்த்திக் கமிட்டியின் அறிக்கையைப் பரிசீலித்து வருவதாகவும் ஆந்திரம் தெரிவித்திருக்கிறதாம்.

# நெல்லை வாரீர்!

★

நெல்லை மாவட்ட இரண்டாவது தி. மு. கழக மாநாட்டு அமைப்பு வேலைகள் துரிதமாக நடந்து கொண்டிருக்கின்றன. தூத்துக்குடி துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிர்நீத்த வீரர்கள் நால்வரின் கல்லறைகள் மீது கொடிமரம் நாட்டவும்; துப்பாக்கிப் பிரயோகத்தில் குண்டடிபட்டு அங்கயீனம் அடைந்தவர்களின் படங்கள், சதி வழக்கிலே குற்றஞ் சாட்டப்பட்டு குற்றவாளிக்கூண்டிலே நிறுத்தப்பட்டவர்களின் படங்கள் அமைக்கவும்; மாநாட்டுத் தலைவர் மேடையிலிருந்து பித்தானை அழுத்தியதும் மின்சார உதவியால் கொடி தானே உயரவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

புகைவண்டி நிலையத்தில் தலைவர்களுக்கு மரியாதை அணிவகுப்பும், ஊர்வலத்தில் 'இராணுவ முறை'யில் பவனி செல்லவும் மாநாட்டுத் தொண்டர்களுக்குப் பயிற்சிகள் அளிக்கப்படுகிறது.

குறிப்பு : மாநாட்டில் கலந்து கொள்ளும் தொண்டர்கள் அரை வெள்ளை டிராயரும், வெள்ளை ஷர்ட்டும் அணிந்து வருமாறு கோரப்படுகிறார்கள்.

********************************************

# நெல்லை மாவட்ட தி. மு. கழக 2-வது சமூகசீர்திருத்த, அரசியல் மாநாடுகள்

★

18, 19—9—1954-ம் தேதிகளில், பாளையங்கோட்டை பவர் அவுஸ் எதிரில் மந்திரம் ஆங்கில் நடைபெறும்

| 18—9—54 சனிக்கிழமை : | 19—9—54 ஞாயிற்றுக்கிழமை : |
|---|---|
| சமூக சீர்திருத்த மாநாடு | அரசியல் மாநாடு |
| தலைவர் : கண்ணதாசன் | தலைவர் : ஏ. வி. பி. ஆசைத்தம்பி |
| துவக்குபவர் : எம். ஜி. ராமச்சந்திரன் | துவக்குபவர் : பூங்கோதை |

இரண்டு நாட்களிலும் கழக முன்னணி வீரர்கள் அனைவரும் கலந்துகொள்வர்

★

சனி இரவு 9-30 மணிக்கு :

இன்னிசை விருந்து — தோழர்கள் நாகூர் அலிபா, சௌந்திரராசன், தோழியர் பி. எஸ். செல்வா

ஞாயிறு இரவு 9-30 மணிக்கு நாடகம் :

'அம்மையப்பன்' — தோழர்கள் எஸ். எஸ். ராசேந்திரன், டி. வி. நாராயணசாமி, தோழியர் சகுந்தலா மற்றும் பலர் நடிப்பது

| வ. கு. தலைவர்கள்: | விளம்பரம்: | தொ. ப. தலைவர்கள்: | செயலாளர்கள்: |
|---|---|---|---|
| எம். எஸ். சிவசாமி, | அப்துல் காதர், | ம. சண்முகம். | என். நடராசன் |
| சு. கந்தசாமி | திராவிடமணி | செல்லப்பாண்டியன் | அலிசேக்மன்சூர் |

பொருளாளர்: எம். வி. சூரியநாதன்

********************************************

திராவிட முன்னேற்றக் கழகத் தலைமை நிலையத்திற்காக தோழர் இரா. செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிட்டு (16, ஜெனரல் முத்தையா முதலித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பட்டது. ஆசிரியர் : சி. என். அண்ணாதுரை எம். ஏ.